**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.110-2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ஜஸ்வர்யா | Prosecution | P.W-1 LW-1 Chief and Cross |
| Husband Name | சிவபாதசேகா் | Defence | |
| Village | செம்மங்குடி | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **<u>26.06.2023.</u>** <u>சத்தியபிரமாணம் பெறப்பட்டது</u>. **<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து எம்.ஏ., திருச்சியில் படித்து வருகிறேன். ஆஜா் எதிாியை எனக்கு தெரியும். சம்பவ சமயத்தில் நான் தர்மபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கலைக்கல்லூாியில் பி.ஏ ஆங்கிலம் இரண்டாம் ஆண்டு படித்து வந்தேன். 11.03.2022 ம் தேதி மாலை 3.30 மணியளவில் கல்லூாி முடிந்து வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது எனது பாட்டியிடம் இருந்து நான் கடன் வாங்கியிருந்த ஈருளியை எனது பாட்டி என்னிடம் கேட்டாா். நான் வீட்டிற்கு சென்று எடுத்து வருகிறேன் என்று சொல்லி பேசிக்கொண்டிருக்கும்போது ஆஜா் எதிரி வீட்டிற்குள் இருந்து வெளியே வந்து என் வீட்டிற்கு ஏன் வந்தாய் என்று கேட்டு குச்சிகாரி, தேவடியா என்று அசிங்கமான வாா்த்தையால் திட்டி மாசமாக இருந்ததை கலைத்தவள்தானே நீ என்று திட்டினாா். ஏன் இவ்வாறு திட்டிகிறாய் என்று கேட்டபோது கீழே கிடந்த கட்டையை எடுத்து என்னை இடது புற மண்டையில் அடித்தாா். அதில் எனக்கு மண்டை உடைந்து இரத்தம் வந்தது. அங்கிருந்தவா்கள் சம்பவ இடத்திற்கு வந்தாா்கள். அவா்களில் எனது அப்பாவிற்கு போன் செய்து தகவல் சொல்லி உடனடியாக சம்பவ இடத்திற்கு வரச்சொன்னாா்கள். அப்பா உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்தாா். என்னை ஆட்டோ மூலம் சீா்காழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றாா்கள். அங்கு எனக்கு அடிபட்ட இடத்தில் 4 தையல்கள் போட்டாா்கள். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் புகாா் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்ல சொல்ல போலிசாா் எழுதிகொண்டாா்கள். அந்த புகாா் வாக்குமூலம் அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் சிகிச்சையில் 5 நாட்கள் இருந்தேன். போலிசாா் என்னை விசாாித்தாா்கள்.

**குறுக்கு விசாரணை**

எனது பாட்டி என்னிடம் ஈருளியை வாங்கி போனாயே சீக்கரமாக எடுத்துவா என்று கேட்டாா். எனது அத்தை எதிரி என்னை எதற்கு என் வீட்டிற்கு வந்தாய் என்று சொல்லி குச்சிகாரி தேவடியா என்று அசிங்கமாக திட்டினாா்.என்னை திட்டி பின்பு நான் எனது வீட்டிற்கு சென்றேனா என்றால் இல்லை. ஏன் இவ்வாறு திட்டுகிறாய் என்று எதிரியை பாா்த்து கேட்டேன். கீழே இருந்த கட்டையை எடுத்து எனது இடது புற மண்டையில் அடித்து விட்டாா். நான் நடந்த சம்பவத்தை எனது அப்பா மற்றும் எனது வீட்டில் உள்ள அனைவரிடமும் சொல்லி

நாங்கள்அழைத்து வந்து  எதிாியை அடித்தோம்  என்றால் சரியல்ல. எதிரியை அடிக்கும்போது நான் குறுக்கே சென்றதனால் எனக்கு அடிபட்டது என்றால் சரியல்ல. நாங்கள் அனைவரும் எதிரியின் வீட்டிற்கு சென்று எதிரியை அடித்ததில் எங்களுக்கு எதிராக புகாா் கொடுத்துள்ளாா் என்றால் சரியல்ல. புகாா் கொடுத்துள்ளாா்.  ஏற்கனவே எங்களுக்குள் சொத்து பிரச்சினை இருந்தது என்றால் சரிதான்.  எனது அத்தை இருந்த வீடு எனது தாத்தாவிற்கு சொந்தமான வீடு.

**மறு விசாரணை இல்லை.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.110-2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | **சிவசங்கர்** | Prosecution | P.W-2 LW-5 Chief and Cross |
| Husband Name | **சிங்காரவேலு** | Defence | |
| Village | **செம்மங்குடி** | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 48 | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day <u>26.06.2023.</u>**
**<u>சத்தியபிரமாணம் பெறப்பட்டது</u>. <u>முதல் விசாரணை</u>**

நான்மேற்கண்ட முகவரியில் வசித்து புரோகிதா் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தொிியும். ஆஜா் எதிாியை எனக்கு தெரியும். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் பாா்வை மகசரில் உள்ள கையெழுத்துகளில் என்னுடையது எதுவும் இல்லை. போலிசாா் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 11.03.2022 ம் தேதி அ.சா.1 க்கும் ஆஜா் எதிாிக்கும் நடந்தசண்டை சம்பந்தமாக போலிசாா் சம்பவ இடமான செம்மங்குடி, வாதியின் பாட்டி தனலெட்சுமியின் வீட்டின் முன்பு போலிசாா் வந்து என் முன்னிலையில் பாா்வை மகசா் மற்றும் மாதிரி வரைபடம் தயாா் செய்தாா்கள் என்றும், அதில் நாா்ன சாடசியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றும் போலிசாா் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**